Judicial Form No. 53
(see Rule 42)
Deposition of the Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, UTHAMAPALAYAM.
CC. NO.22/2021 Date: 26.10.2022
Deposition of witness for prosecution: PW1 (LW1)

| Name | சுருளியம்மாள் | Caste | |
|---|---|---|---|
| Father/ Husband Name | | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | Year: |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (central Act 44 of 1969) on 26.10.2022 TIME 1.04 pm

**முதல் விசாரணை :**

நான் தற்போது பொம்மிநாயக்கன்பட்டியில் குடியிருந்து வருகிறேன். சுமார் 2 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள், தேதி மாதம் ஞாபகம் இல்லை. மதியம் சுமார் 3.00 மணியளவில் நான் எனது வீட்டிலிருந்துபோது எனது கணவர் பிச்சை இருசக்கர வாகனத்தில் ஓடைப்பட்டிக்கு சென்றுவிட்டு வருவதாக சொல்லிவிட்டு சென்றார். ஓடைப்பட்டி அருகே உள்ள தென்பழனி ரோட்டில் எதிரே வந்த வாகனம் விபத்து ஏற்படுத்தி அதில் எனது கணவர் இறந்துவிட்டதாக எனக்கு தகவல் கிடைத்தது. நான் சின்னமனுார் அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். பின்னர் ஓடைப்பட்டி காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான். அதில் நான் கைரேகை வைத்தேன். புகார் மனு அ.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

புகாரினை நான் சொல்ல சொல்ல எழுதி கொண்டார்கள். புகாரில் உள்ள விபரங்களை என்னிடம் படித்து காண்பிக்கவில்லை. நான் தற்போது கூறியுள்ள விபரத்தை தான் போலிசார் விசாரணையின் போது தெரிவித்தேன். யார் எனக்கு தகவல் கூறினார்கள் என்று தெரியாது என்றால் சரிதான். சம்பவத்திற்கு பின்னர் போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்களா என்றால் இல்லை.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து படித்து பார்த்து விளக்கி கூறி சரியென ஒப்புக்கொண்டுகையொப்பம் செய்துள்ளார்.

A RAMANATHAN
Digitally signed by A RAMANATHAN
Date: 2022.10.26 06:46:50 +0530

நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.

Judicial Form No. 53
(see Rule 42)
Deposition of the Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, UTHAMAPALAYAM.
CC. NO.22/2021 Date: 26.10.2022
Deposition of witness for prosecution: PW2 (LW7)

| | | | |
|---|---|---|---|
| Name | சங்கிலிராஜா | Caste | |
| Father/ Husband Name | | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | Year: |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (central Act 44 of 1969) on 26.10.2022 TIME 1.15 pm

**முதல் விசாரணை :**

நான் தற்போது பொம்மிநாயக்கன்பட்டியில் குடியிருந்து, எலக்ட்ரீசியனாக வேலை செய்து வருகிறேன். அ.சா1 எனது அம்மா ஆவார். சுமார் 2 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள், தேதி மாதம் ஞாபகம் இல்லை. மதியம் சுமார் 2.40 மணியளவில் நான் வெளியில் வேலைக்கு சென்றிருந்தபோது எனக்கு போன் மூலம் எனது அப்பா பிச்சைக்கு ஓடைப்பட்டி சமத்துவபுரம் ஆர்ச் அருகே தென்பழனி ரோட்டில் இருசக்கர வாகனத்தில் மோதி விபத்து ஏற்பட்டதாக தகவல் கிடைத்தது. நான் சின்னமனூர் அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். அப்போது எனது அப்பா இறந்துவிட்டார். புகார் எனது அம்மா காவல் நிலையத்தில் கொடுத்திருந்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்து நடந்த சம்பவத்தின் போது நான் பக்கத்துாரில் வேலை செய்து வந்தேன். யார் எனக்கு தகவல் தெரிவித்தார்கள் என்று தெரியாது. விபத்து ஏற்படுத்திய வாகனத்தை யார் ஓட்டி வந்தார்கள் என்று எனக்கு தெரியாது. எனது அப்பா உடன் சென்ற நபர் யார் என்று தெரியாது. சம்பவத்திற்கு பிறகு போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பெறவில்லை. நான் சொன்னது போல் சம்பவம் ஏதும் நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து படித்து பார்த்து விளக்கி கூறி சரியென ஒப்புக்கொண்டுகையொப்பம் செய்துள்ளார்.

A RAMANATHAN
Digitally signed by A RAMANATHAN
Date: 2022.10.26 06:46:56 +0530

நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.